ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிறுபாணாற்றுப்படையில் நல்லியங்கோடனின் ஆளுமைப் பண்புகள்

**முனைவர்ஆ. ஷர்மி**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி -2**

**7**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வரலாற்றையும் மன்னர்களின் ஆட்சி சிறப்பினையும் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கற்றுத் தேர்ந்த புலவர் பெரு மக்கள் அரசனின் சிறப்பினையும் கலைஞர்களின்; வாழ்க்கையினையும் தம் எண்ணங்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். மக்களைக் காக்கும் பொருப்பில் இருக்கக்கூடிய மன்னன் தன்னலம் கருதாத தொண்டுள்ளம் மிக்கவனாக விளங்க வேண்டும்;;. மாவிலங்கையில் கோலோச்சிய மன்னர்களுள் சிறப்புடையவன் நல்லியக்கோடன். ஆற்றுப்படை என்னும் இலக்கணத்தின் எல்லைகளுக்குள் நின்று சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் தலைமைப் பண்பு, பரிசில் வழங்கும் தன்மை, இரவலரை பாதுகாக்கும் பாங்கு, விருந்தோம்பலின் சிறப்பு, கொடைத்திறம், முதலிய சிறந்த நற்சிந்தனைகளுடைய மன்னன் நல்லியக்கோடனைக் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** அருஞ்சொற் பொருள் யாக்கை – உடல், உண்டி - உணவு, குருளை – குட்டி, மருங்கு - பக்கம்,தெவ்வர் – பகைவர்.

**முன்னுரை:**

மாவிலங்கையில் கோலோச்சிய மன்னர் பலருள்ளும் ஓவியர் குடியில் பிறந்த மன்னர்கள் சிறந்தவர்கள்;. அவர்களுள் சாலச் சிறப்புடையவன் நல்லியக்கோடன். சிறுபாணாற்றுப்படையின் வரலாற்றுச் செய்திகளையும், நல்லியக்கோடனின் தலைமைப் பண்பு, ஈகைத்தன்மை, இரவலரை பாதுகாக்கும் பாங்கு, விருந்தோம்பலின் சிறப்பு, கொடைத்திறம், முதலிய சிறந்த பண்புகளை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**தலைமைப்பண்பு:**

மக்களைக் காக்கும் பொருப்பில் இருக்கக்கூடிய மனன் தன்னலம் கருதாத தொண்டுள்ளம் மிக்கவனாக விளங்க வேண்டும்;;. மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு அவர்களின் வளமான வாழ்வுக்கு வழி அமைப்பவனே நல்ல தலைவன் ஆவான். வள்ளுவர் இதனை

“படைகுடி கூழ்அமைச்சு நுட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”1 என்று குறிப்பிடுகின்றார்.

செய்நன்றி அறிதல், சிற்றினம் சேராமை, இன்முகமுடைமை, அஞ்சாமை, வெகுளாமை, அகம், புறம் இரண்டிலும் இனியனாதல் ஆகிய நற்பண்புகள் நிறையப் பெற்றவன் என சான்றோரால் புகழப்பட்டவன் நல்லியக்கோடனாவான்; என்பதை

“செய்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையால்
இன்முகம் உடைமையும் இனி;யன் ஆதலும்
சிறந்து விளங்கும் சிறப்பின் அறிந்தோர் ஏத்த”2

என்று நத்தத்தனார் கூறுகிறார்.

“பன்மீன் நடுவண் பால்மதி போல
இன்நகை ஆயமொடு
இருந்தோற் குறுகி”3

என்று நத்தத்தனர் திங்களுடன் ஒப்புமைப்படுத்தி;க் கூறுகிறார். மேலும்

“அறிவுடம் படுதலும் அறிவு நன்குடைமையும்
வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்”4

பண்பில் சிறந்த பெரியோரைக் காணுங்கால் மதிப்பளித்து மரியாதை செய்யும் சிறந்த பண்பினைப் பெற்றிருந்தான் என்றும் புகழ்கின்றார்.

“குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்;பின் நல்லியக்கோடன்”5

என்ற வரிகளில் நல்லியக்கோடன் பண்பில் சிறந்தவன் என்று அறியமுடிகிறது. கடைஏழு வள்ளல்களும் ஏற்று நடத்திய கொடை பண்பினை உலகும் வியக்கும்படி தான் ஒருவனே மேற்கொண்டு தாங்கிய வலிமைமிக்க முயற்சியை உடையவன் நல்லியக்கோடன். அவன் பகைவரை மார்பினும், முகத்தினும் வெட்டி வெல்லும் மறச்சிறப்புப் பெற்றவன். பிடிக்கணம் சிதறும் என்பதால் நல்லியக்கோடன் அள்ளி வழங்கும் கொடைப் பண்பைக் கொண்டவன்.

**கடமை உணர்வு**

வள்ளல் தன்மை கொண்டு விளங்குபவரின் புகழ் இவ்வுலகில் அடங்காத சிறப்பினை உடையது. உலகம் தன் கொடையால் விலங்குமாறு தான் ஒருவனாக நின்று வழங்கினான். புரிசிலர்க்கு தந்தையை போன்றவன. நல்லியக்கோடன் போன்ற கொடையாளிகளும் வாழ்ந்த காலத்திலும் தமிழ் மக்கள் பலர் வறுமையால் வாடினர். பாணர்களும் உண்ணுதற்கு உணவின்றிப் பட்டினியால் பரிதவித்தனர். தழைகளையும், கீரைகளையும் வேகவைத்;து உண்டு பசி வேதனையைக் தணித்துக் கொண்டனர். இந்த நிலையை சித்தரித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

“திறவாக் கண்ண சாய்செவிக் குருளை,
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது,
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர், முதுசுவர்க் கணச்சிதல் அரித்த”6

என்ற பாடல் வரிகளின் மூலம் அண்மையில் குட்டிகளை ஈன்ற நாய், தன் குட்டிகளிடத்தும்

பெரிதும் அன்புடையதாய் இருக்கும். கண்களைத் திறவாத சாய் செவிக் குருளை பால் மிகுதியாக உண்ணாது, எனினும் அவற்றிற்குப் பாலூட்ட முடியாத வறுமுலை நாய் என்பதனால் அவ்வீட்டில் நிலவிய வறுமை நிலையினை

“ஒல்குபசி உழந்த ஒழுங்குநுண் மருங்குல்
வளைக்கை கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேலை உப்புஇலலி வெந்ததை,
மடவோர்காட்சி நாணி, கடை அடைத்து”7

என்ற வரிகளில் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

வறுமையால் அடுக்களையின்கண் இருத்தற்கு உரிய அரிசி முதலிய பண்டங்களும், கருவிகளும் இன்றிப் பொழிவிழந்து இருக்கின்ற அட்டில்கள், கட்டற்று வீழ்ந்து கிடைந்த கூரைக் கழிகள், பழைய சுவர் என்பதால் அசு;சுவரில் கறையான் புற்று இருப்பது இயல்பானதாகும். அப்புழுதியில் காளான் பூத்திருப்பதாகவும். பாணனின் வீடு காட்சியளிக்கிறது. இவை மட்டுமின்றி, பசியினால் வருத்தி வாடுகின்ற இடையை உடைய வளையலை அணிந்த பாணனின் மனைவி வீட்டிலே உணவு சமைப்பதற்கு ஒரு பண்டமும் இல்லை. ஆதலால் குப்பையிலே பயிரான வேளைக் கீரையை கூர்மையான நகத்தினால் கிள்ளியெடுத்து, உப்பில்லாமல் வேகவைத்து அறியாதவர்கள் அதைப்பார்த்தால் பரிகசிப்பார்களே என்று எண்ணி நாணமடைந்து வாயிற்கதவைச் சாத்திக் தாளிட்டுக் கொண்டு உள்ளே நிறைந்த சுற்றத்துடன் உட்கார்ந்து அதனை உண்பதாகவும், இத்தகு வறுமை எம்மைவிட்டு அகலவும், அறிவு முதலியன அழிதற்குக் காரணமாகிய பசியால் உளதாகிய வருத்தங்கள் அறவே ஒழியவும் இந்நாள் மதம் பொழிகின்ற கதுப்பினை உடைய கொலைத்தொழில் மிக்க சிறுகண் யானையோடு, பெரிய தேரினையும் பெற்று யாம் அந்நல்லியக்கோடன் அரண்மனையின்றும் வருகின்றோம் என்று பாணன் புகழ்ந்து கூறுகி;றான். இவற்றிலிருந்து எளியவரின் வறுமையை போக்கும் முன்மாதிரியான மன்னனாக அரசாண்டுள்ளான் என்புது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

**அடையா வாயில்**

மலை நாட்டுக்குத் தலைவனான நல்லியக்கோடனின் அரண்மனைக்கு எளிதில் செல்ல முடியாது. ஆனால் பொருநர், புலவர், வேதம் ஓதும் அந்தணர்கள் இவர்களுக்கு எப்போதும் அடைக்கப்படாமல் இருக்கும் வாயில் என்பதை

“பொருநர்க்காயினும் புலவர்க்காயினும்
அருமறை நாவின் அந்தஓர்க் காயினும்
கடவுள் மால்வரை கண்விடுத்தன்ன
அடையா வாயிலவன் அருங்கடை குறுகி”8 என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**கொடைச்சிறப்பு:**

நல்லியக்கோடன் வீரத்தினில் சிறந்து விளங்கினாலும், கொடைச் சிறப்பிலும் கடையெழு வள்ளல்களின் கொடைச்சிறப்பை விட உயர்ந்து விளங்கினான் என்பதை

“திறல்சால் வென்றியொடு தெவ்வுப் புலம் அகற்றி,
விறல்வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர், பாணர், புண்கண் தீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு;”9

என்ற வரிகளின் மூலம் பகைவர்களை தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகச் செய்த வலிமையினையும், வெற்றியினையும் உடையவன். வெற்றி சிறப்பினை உடைய மன்னர்களின் அரண்களை அழித்தவன், தன்னை நம்பியும், விரும்பியும் வந்த பரிசிலர், பாணர் போன்றவர்களது வறுமையைத் தீர்த்தவன். பகைநாட்டு அரசர்களிடம் இருந்து திறைப் பொருளாகப் பெற்ற பொருள்களுடன் பல்வேறு பரிசில்களையும் அவர்களுக்கே திரும்பவும் வழங்கியவன். பரிசில்கள் வழங்குவது அரசனின் கடமை என்பதை,

“வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்”10என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இரவலர்க்கு மூங்கிலின் மெல்லிய மேலாடைகளை போல் அமைந்துள்ள ஆடைகளை வழங்கி மகிழ்ந்தான் என்பதை

“காம்பு செலித்து அன்ன அறுவை உடீஇப்”11 என்ற வரிகள் உணர்த்துகின்றன.புலியை ஒத்த வீரமுடைய நல்லியக்;கோடன் தன்னை நாடி வருகிறவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை உடையவனாகத் திகழ்ந்திருக்கிறான்.

**ஈகைத்திறம்**

நல்லியக்கோடன் மக்களின் நலன் கருதி ஈகைப்பண்பு மிக்கவனாகவும் மக்களின் வறுமையை போக்குபவனாகவும் வாழ்ந்து வந்துள்ளான். இதனை

“ஈதல் இசைபட வாழ்தல்”12 என வள்ளுவர் கூறுகிறார்

“எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி
வேறொன்றும் அறியேன் பராபரமே”13 தாயுமானவரின் கூற்றுப்படி எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும்.

“செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே”14

வறுமையில் வரும் பாணன் தன் விறலியருடன் அரசனின் அவைக்கு சென்ற போது அவர்களின் மனம் குளிரும்படி பரிசுகளை வழங்கினான் நல்லியகோடனின் தன் அன்பினை செயல்களில் காட்டுபவனாகத் திகழ்ந்திருக்கின்றான்.

“ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு
மாசெல ஒழிக்கும் மதனுடை நோன்தாள்
அன்பே விடுக்கும் உன் பரிசில்”15

என்ற வரிகளில் அறிய முடிகிறது. மழை மேகம் போன்று வலையாது வழங்கும் கொடைத்திறம் வாய்ந்தவன்

நல்லியக்கோடன். இவன் கூத்தரைப் பேணுவதில் மட்டுமன்றி கடையெழு வள்ளல்கள் மறைந்த பின்பு ஒருவனாக நின்று இரவலரைக் காத்தவன். ஏழு வள்ளல்களின் சிறப்பையும் நல்லியக்கோடனிடம் ஒருங்கே காண்பதாக கூறப்படுகிறது. இதனை

"எழுவர் பூண்ட ஈகைச் செந் நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தான்"16

என்று கொடை மாட்சியில் கடை ஏழு வள்ளல்களையும் விஞ்சியவனாக கருதப்படுகிறான். என்று நல்லியக்கோடனை புகழ்ந்து பாடியுள்ளார்.

வள்;ளல் தன்மை

அரசர்கள் பலவகையான பரிசில்களை பரிசிலருக்கு கொடுத்து மகிழ்ந்தனர் அந்த வகையில் நல்லியக்கோடனும் பல பரிசில்களை வழங்கி உள்ளம் மகிழ்ந்தான் என்பதை,

"ததர்பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு எறிந்த வருக்குறு போர்வை,
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி,
வளர்ந்து பெயர்பெற்ற எழில்நடைப் பாகரொடு,
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோண்தாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு, தரீஇ,
அன்றே விடுக்கும் அவன் பரிசில்" 17

"தறுகண் புட்கை தயில் மணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி"18

என்ற வரிகள் ஆர்களைச் சூழ்ந்த சூட்டினள் உடைய உருளையனையும், முருக்க மரம் மலர்ந்த தோற்றம் போன்று சாந்தலிங்கத்தில் செய்யப்பட்ட போர்வையினையும், தச்சர் தொழில் முற்றுப் பெற்ற பின்னர் எதிர்பார்த்து நல்ல ஓட்டம் வண்டு என்று புகழப்பட்ட அழகினையும், நடையையும் உடைய தேரினையும், குதிரையும், மற்றும் பொன் , ஊர்கள், பிற அணிலன்களையும் பரிசிலாக வழங்கினான் வள்ளல் நல்லியக்கோடன். என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**விருந்தோம்பல் பண்பு**

பண்டைத் தமிழர் டிமேற்கொண்ட சிறந்த பண்பாகும். இல்லம் தேடி வந்தோர் யாவாராயினும் அவர்களை இன்முகம் காட்டி வரவேற்று. இன்சொல் கூறி தம்மிடம் உள்ளதை ஆர்வமுடன் பகுத்துக் கொடுத்து மகிழும் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர். தன்னை அடைந்தவர்களின் துன்பம் கண்டு மனமுருகி அத்துன்பம் தீர்த்தருளும் அருளுணர்வே சிறந்த செல்வமென சான்றோர் வலியுறுத்தியுள்ளனர். விருந்தோம்பல் பண்பு தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப்பட்டுள்ளது என்பதை,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே"19

என்ற புறநானூற்று பாடல் தமிழர்களின் விருந்தோம்பற் பண்பினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. பொருளையும் இன்பத்தையும் அறத்தின் வாயிலாகவே மனிதன் அடைதல் வேண்டும். எளிய மக்களுக்கு செய்யப்படுகிற உதவியை,

"ஆற்றுநர்க் அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்;நெறி வாழ்க்கை"20

என்று மணிமேகலை காப்பியம் கூறுகின்றது.

இதனை சிறுபாணாற்றுப்படைத் தலைவன் நல்லியக்கோடன் தன்னிடம் வரும் இரவலர்க்கு தங்குவதற்கு இடம் கொடுத்து உணவு வழங்கி அவர்களுக்கு தேவையானவற்றை கொடுத்து வாழ்ந்தான். ஏன்பதை

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"21

என்ற குறளின் மூலம் இல்லத்தில் இருக்கின்ற பொருட்களை எல்லாம் போற்றி வாழ்கின்றவர்களின் பயன் எல்லாம், வீடு தேடிவந்த விருந்தினர் தம் இல்லத்தில் விருந்துண்டு செல்வத்தை பேறாகக் கருதி வாழ்ந்தனர்.

"வறற் குழற் சூட்டின் வயின் வயின் பெருகுவீர்"22
"எயிறிறியர் அட்ட இன்புறு வெண்சோறு"23
"அவைப்பு முhண்அரிசி அமலை வெண் சோறு"24

போன்ற வரிகளில் தன்னை நாடி வந்த இரவலர்க்கு குழல் மீன் கருவாடு , புளிக்கறி இட்ட சோறு அரிசி சோற்றுடன் நண்டின் குழசுவையுடன் கொடுத்து உண்டு வாழ்ந்தான் என்பா

"விளங்கு பொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தானின்னுட்டி விடுவான்."25

ஏன்ற வரிகளில் தன்னை நாடி வருபவர்க்கு தானே ஊட்டி மகிழ்ந்தான் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

சிறுபாணாற்றுப்படை இலக்கியத்தரம் மிக்கனவாக விளங்குகின்றது. இந்நுலில் இடம் பெறும் ஒவ்வொரும் நிகழ்ச்சியும் உலகியலை ஒட்டியே அமைந்துள்ளது. இவை நடப்பு உலகத்தையே நம் கண்முன் காட்டுகின்றது.; சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் தலைமைப் பண்புகள், பாணனின் வறுமை நிலையும், பரிசிலும், விருந்து உபசரிப்பின் தன்மைகள், கொடைப்பண்பு, முதலிய செய்திகள் விளக்கமாக புலப்படுகின்றது. கொடைத் தன்மையும் ஈகை பண்பு இளகிய உள்ளத்துடன் மன்னர்கள் இயற்கையோடும், மக்களோடும் இயைந்த வாழ்வினை மேற்கொண்டுள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றது. நல்லூர் நந்தத்தனார் வரலாற்று உண்மைகளைப் பற்றியும், சமுதாய கருத்துகளைப் பற்றியும். தெளிவாக கையாண்டுள்ளார். இவர் பரந்த அறிவுடையவர் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து நிறைந்த வாழ்க்கை அனுபவம் பெற்ற கலைஞர் என்பதையும் இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகிறது.

**சாண்றென் விளக்கம்;**

1. மு.வரதராசனார் - திருக்குறள் - கு - எ 381
2. பொ. வே. சோமசுந்நரனார் -சிறுபாணாற்றுப்படை பா- வ 207 -209
3. பொ. வே. சோமசுந்நரனார் - சிறுபாணாற்றுப்படை பா- வ 218 -220

4.மேலது - பா வரி 216 -218

5.மேலது - பா வரி 267 -269

6.மேலது - பா வரி 130 - 133

7.பொ. வே. சோமசுந்நரனார் - சிறுபாணாற்றுப்படை பா- வ 135-138

8.மேலது - பா வரி 203 - 206

9.மேலது - பா வரி 246 - 249

10. மு.வரதராசனார் - திருக்குறள் கு - எ 546

11. பொ.. வே. சோமசுந்நரனார் - சிறுபாணாற்றுப்படை பா- வ 235

12.மு.வரதராசனார் - திருக்குறள் - கு - எ 231

13.தாயுமானவரின் - திருப்பாடல் திரட்டு பராபரக்கண்ணி - 221

14. உ. வே. சுhமிநாதய்யர் புறநானுறு - பா - எ 189

15. சிறுபாணாற்றுப்படை -பொ.வே. சோமசுந்நரனார் பா- வரி 258- 260

16. மேலது - பா வரி 213 - 215

17. மேலது - பா வரி 255 - 261

18. மேலது - பா வரி 141 - 142

19. புறநானுறு உ. வே. சுhமிநாதய்யர் பா- எ 18

20. சீத்தலைச்சாத்தனார் -மணிமேகலை பாத்திரம்பெற்ற காதை- பா.-வரி 93- 94

21. மு.வரதராசனார் -திருக்குறள்- கு - எ 81

22பொ. வே. சோமசுந்நரனார் - சிறுபாணாற்றுப்படை - பா- வரி 163

23 மேலது - பா- வரி 175

24 மேலது - பா வரி 194

25. போ. வே. சோமசுந்நரனார் - சிறுபாணாற்றுப்படை - பா- வரி 244 245

**துணைநுல் பட்டியல்**

1 திருக்குறள் - மு.வரதராசனார், 142 -ஜானி ஜான் கான் சாலை இராயப்பேட்டை,சென்னை 14 முதற்பதிப்பு டிசம்பர் 2005

2 சிறுபாணாற்றுப்படை - பொ. வே. சோமசுந்நரனார் , சைவ சித்தாந்த நுற்பதிப்பு கழகம், 1957 சென்னை

3 ஔவை துரைசாமிப்பிள்ளை -மணிமேகலை பாத்திரம்பெற்ற காதை
தென்னிந்திய சைவ சித்தாந்த
நுற்பதிப்பு கழகம் 154 டிடி கே சாலை 1994 சென்னை
4 ஔவை துரைசாமிப்பிள்ளை - புறநானுறு
154 டிடி கே சாலை 1994 கழகப்பதிப்பு 1957 சென்னை
5 கமலக்கண்ணன் - திருப்பாடல் திரட்டு- பராபரக்கண்ணி
வானதி பதிப்பகம் இராயப்பயபேட்டை 2019- சென்னை